Nallur Branch Library

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    சித்திரை 24    ( 06 - 05 - 1992 )    புதன்கிழமை    ஓசை: 78

## தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் உதயம்

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது; விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் நிர்வாகக் கட்டுப் பாட்டின் கீழ் இந்த ஆய்வு நிறுவனம் இயங்கும் என விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. அச்செய்திக் குறிப்பில், கிளிநொச்சியில் கடந்த மார்ச் மாதம் 7-8 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் தேசிய மாநாட்டின் போது, பெண்கள் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைப்பதென விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தீர்மானித்தது. இது மகளிர் முன்னணியின் வேலைத்திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் இடம் பெற்றது. காலம் காலமாக, பல நூற்றாண்டு (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தடை செய்யும் விவகாரம்: மத்திய, மாநில அரசுகள் மோதல்

## ஆதாரம் இல்லை என்கிறார் அமைச்சர் ஆதாரமுண்டு என்கிறார் ஜெயலலிதா

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யும் விவகாரம் குறித்து மத்திய, மாநில அரசுகள் மத்தியில் பலத்த கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லையென இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பீகாரில் பத்திரிகையாளருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது. இந்திய அமைச்சரின் இந்தக் கூற்றை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும், தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் பலமாக கண்டித்துள்ளனர்.

அண்மையில் பீகாரில் போதிய ஆதாரங்களைத் திரட்டும் வரை விடுதலைப் புலிகளை மத்திய அரசு தடை செய்ய இயலாதென்று அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்தார். விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து மத்திய அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்த பின்னர் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்துள்ளமை மத்திய அரசாங்கம் புலிகளை தடை செய்வதில் சிக்கல்கள் எழுந்திருப்பதையே உறுதிப் படுத்துவதாக உள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### ஜெயலலிதா ஆட்சேபம்

இதேவேளை அமைச்சரின் இக்கூற்றை ஆட்சேபித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிக்கையொன்றை விடுத்துள்ளார். இவ்வறிக்கையில்

"விடுதலைப்புலிகள் தமிழக மக்களின் வாழ்க்கையில் ஊடுருவி சில அரசியல் வாதிகள் உட்பட உள்ளூர் வாசிகளின் உதவியுடன் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதற்கான ஆதாரம் அ.இ. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் கிடைத்திருக்கிறது விடுதலைப்புலிகள். சில உள்ளூர் வாசிகளை தூண்டிவிட்டு இங்கு தீவிரவாத நடவடிக்கைகளை தூண்டிவிட்டு, தமிழ் நாட்டை தனித் தமிழ் நாடாக்க முனைந்து வருவது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டதால் புலிகளைத் தடைசெய்ய இதற்கு மேலும் ஆதாரம் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் மத்திய அமைச்சரின் கருத்து தனக்கு அதிர்ச்சியளித்துள்ளதாகவும் வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பு எமது தேசியத் தலைவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் படை பொலிஸ் மோதல்

[காலி]

திஸ்ஸமஹாராமவில்பொலிஸ்சுக்கும் விமானப் படைக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த பொலிஸ் ஒருவர் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பாக வீரவிலா விமானப் படை முகாமைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது.

## கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களிடம் இணைப்புகோரிக்கையைகைவிடுக; சுதந்திரக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான கோரிக்கையைக் கைவிடும்படி கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களை சுதந்திரக்கட்சியிலுள்ள ஹெல உறுமய குழுவினர் கோரியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இயங்கும் ஹெல உறுமய குழுவின் சார்பில் திலக் கருணாரத்தினா, எஸ். எல். குணசேகரா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கை யொன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

வடக்கையும், கிழக்கையும் ஒரே மாகாணமாக இணைத்தால் முஸ்லிம்களும், சிங்களவர்களும் சிறுபான்மையினராகிவிடுவர் என்றும், அதன் மூலம் தமிழர்கள் ஆதிக்கம் பெற்றுவிடுவர் என்றும், எனவே வடக்கு-கிழக்குபகுதியில் முஸ்லிம்களுக்கும், சிங்களவருக்கும் சமவுரிமை அளிக்கும் வகையில் இணைப்புக் கோரிக்கையைக் கைவிடவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேதினப் பேரணிகளை சுவிசில் புலிகள் நடத்தினர்

(சுவிஸ்)

விடுதலைப் புலிகளின் சுவிட்சர்லாந்து கிளை மேதினத்தை சூரிச்சிலும், ஜெனிவாவிலும் கொண்டாடியது இவ் இரு நகரங்களின் புகையிரத நிலையங்களில் இருந்து தனித்தனியான ஊர்வலங்களை முன்னணியின் கிளை நடத்தியது.

சூரிச்சில் நடைபெற்ற ஊர்வலத்தில் பெருந்தொகையான தமிழ் மக்கள், தமிழ்ப்பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஊர்வலத்தில் துரந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

லெப். ஜெகதீஸ்வரன்

# வவுனியாவில் புலிகள் மின்வேக அதிரடி;

# 6 காவலரண்கள் அழிப்பு; 9படையினர் பலி



வவுனியா தொடர் காவலரண்கள்மீதுநேற்றுவிடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட திடீர் தாக்குதல் நடவடிக்கையின் போது போராளிகள்தரப்பில் ஒரு வீரவேங்கை வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் ஜெகதீஸ்வரன் (பரமசிவம் ஜெயசிலன், தவசியகுளம், வவுனியா) என்னும் போராளிக்குதமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

(வவுனியா)

வவுனியாவில் நேற்று சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல் வேகத் தாக்குதலில் ஆறு காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. ஒன்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன ஒரு இராணுவச் சடலமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இத் தாக்குதல் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நேறறு அதிகாலை 12 20 மணியளவில் வவுனியா நொச்சி மோட்டை - மாமடு தொடர் காவலரண்கள் மீதுவிடுதலைப் புலிகள் மின்னல் வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

ஐந்து நிமிட நேரம் நடந்த இத்தாக்குதலில் ஆறு சிறிலங்கா இராணுவ காவலரண்கள்முற்றாக அழிக்கப்பட்டன. ஒன்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். காவலரண்களில் இருந்த ஏனைய இராணுவத்தினர் காயங்களுடன் முகாமிற்குத் தப்பியோடிவிட்டனர்.

ஒன்பது நவீனரக துப்பாக்கிகள் உட்பட பெருமளவு இராணுவப் பொருள்களும் ஒரு இராணுவச் சடலமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதல் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஏழு பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

நேற்று அதிகாலை வவுனியா நொச்சி மோட்டை-மாமடு சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் இராணுவப் பொருள்களும் வருமாறு.

★ 303 எல். எம். ஜி - 01
★ 303 எல். எம். ஜி மேலதிக சுடுகுழல் - 10
★ ஜி 3 ஏ 3 துப்பாக்கி - 03
★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி - 03
★ 40 மி.மீ கைத் துப்பாக்கி - 01
★ 303 துப்பாக்கி - 01
★ 303 எல். எம். ஜி ரவைக்கூடுகள் - 09
★ ஜி3 ஏ3 ரவைக் கூடுகள் - 24
★ ரி - 56 ரவைக் கூடுகள் - 07
★ ரி - 81 ரவைக் கூடுகள் - 06
★ 303 ரவைக்கூடுகள் - 01
★ ஏ. கே. கோல்சர் - 07
★ 303 ரவைகள் - 1108
★ நடுத்தர ரவைகள் - 970
★ நேட்டோரவைகள் - 1145
★ ஜே. ஆர். கைக்குண்டு - 02
★ ஐ. என். ரி - 01
★ பரா வெளிச்சகுண்டு - 01
★ சப்பாத்து - 09 சோடி
★ மழை அங்கி - 02
★ தண்ணீர்போத்தல் - 05
★ கிட்பாக் - 10
★ தலைக்கவசம் - 06
★ தொப்பி - 03

## காத்தான்குடிப் பகுதியில் புதியபொலிஸ் நிலையங்கள்

(கொழும்பு)

காத்தான் குடிப் பகுதியில் மேலும் ஒரு சிறிலங்காப் பொலிஸ் நிலையம் திறக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. மஞ்சத் தொடுவாய் போன்ற கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்கள் மீளக் குடியமரச் செய்வதற்கு இந்தப் புதிய பொலிஸ் நிலையங்கள் பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை முழுவதும் சுதந்திர வர்த்தக வலயம்

(ஹொங்கொங்)

இலங்கை முழுவதிலும் முதலீட்டை ஊக்குவிக்கும் முகமாக முழு நாடும் சுதந்திர வர்த்தக வலையமாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. இத்தகவலை ஹொங்கொங்கில் நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான டி. பி விஜய துங்கா தெரிவித்தார்

## வைத்தியர் பற்றாக்குறை; சுகாதாரம் சீர்கேடு

மன்னார் ஆதார வைத்திய சாலையில் டாக்டர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலிருந்து வந்த மன்னாரைச் சேர்ந்த அகதிகளை மன்னார் தீவிலுள்ள முகாம்களில் தங்க வைத்திருப்பதால் சுகாதார நிலைமைகள்மேலும் மோசமடைந்துள்ளன.

1991 இல் சித்தியடைந்த 472 டாக்டர்களில் ஒரு பெண் டாக்டர் மட்டும்தான் மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார். அவரும் கடமையைப் பாரமேற்கவில்லை. அடுத்த ஆண்டில் சித்தியடைந்த 393 பேரில் ஒருவர் தானும் மன்னார் ஆஸ்பத்திரிக்குநியமனம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## நோயாளிகள் வருகை

கொழும்பில் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்ட நோயாளிகளில் 59 பேர் நேற்று யாழ் வந்தனர். மேலும் நேற்று குமணக்கப்பல் மூலம் 72 நோயாளிகள் திருக்கோணமலை சென்று அங்கிருந்துகொழும்புசெல்கின்றார்கள்

## ரொமேஷ் பண்டாரி ஜே. ஆர். சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல தீர்வு காண்பதற்காக சுதந்திரக்கட்சி எம்.பி. மங்கள முனசிங்காவின் தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அடுத்தகட்ட கூட்டம் இம்மாதம் 19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இது இவ்விதமிருக்க ஐ.தே.க. மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்த முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரொமேஷ் பண்டாரி இந்தியா திரும்புவதற்கு முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக்கு புத்துயிர் அளிக்க இந்தியா தீவிர முயற்சி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்குப் புத்துயிர் அளித்து தமிழர் அரசியலில் மீண்டும் புகுத்துவதற்கு இந்திய ஆளும் வட்டாரங்கள் முயற்சிசெய்து வருவதாக நம்பகமாகத்தெரிய வருகிறது.

இதன் முதற்படியாக சிவசிதம்பரம், சம்பந்தர், ஆனந்தசங்கரி ஆகிய தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இந்தியாவில் இருந்து கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களையும், இவர்களையும் ஒன்றிணைத்து தமிழர் அரசியலில் ஈடுபடுத்துவதற்கு இந்திய அரசியல் வட்டாரங்கள் முயற்சி செய்துவருவதாக நம்பப்படுகிறது. கூட்டணியின் தலைமையின் கீழ் ஏனைய கொழும்பில் இயங்கும் குழுக்களைக்கொண்டுவர இந்திய அரசியல் வட்டாரங்கள் முயற்சி செய்து வருவதாகவும் தெரிய வருகிறது.

அத்துடன் அரசியல் செயற்பாடுகளுக்கென கூட்டணியினருக்கு நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# இனிய இசைக்கு மெருகு அளிப்பது மொழி என்பதில் சந்தேகமில்லை

## தமிழிசை விழாவில் வண. பிதா யோசப் அடிகளார்

இசை என்றால் பொதுவாக உயர்ந்ததுதான். அந்த இசைக்கு மேலும் மெருகூட்டுவது மொழி என்றால் மிகையாகாது. ஒரு இனத்தினுடைய மொழியைப் பிரதிபலிப்பதாக இசை அமைகின்றது. இசை இனிமையானது. அந்த இசைக்கு கவர்ச்சியையும், சாந்த சக்தியையும் உண்டு பண்ணுவது நிச்சயமாக மொழியாகத்தான் இருக்கும்.

இவ்வாறு நல்லூர் வடக்கு வீதியில் நடைபெற்ற மூன்றாம் நாள் தமிழிசை விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வண. பிதா ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

இன்பத்துள் இன்பம் பேரின்பம் பாரில் இனிய கனியாம் இசையினை நிதம் பாடிப் பாடிச் சுவைத்துத் துன்பத்தைத் துடைப்பதுவே தூய இன்பம்.

ஆம்! மலைகளிலே உயர்ந்தது இமயம். நல்ல கலைகளிலே உயர்ந்ததுஇசையசும். இசை இனியது, மிக மிக இனியது, இன்பத்தேன் பொழிவது, இன்பங்களின் மணி மகுடம் போன்றது; இறைவனே இசை வடிவினர் என்பர்.

இசை உள்ளக் கிளர்ச்சியையும், உடல் மலர்ச்சியையும் உண்டு பண்ணுகின்றது. உயிருக்கு ஒளி ஊட்டுவது மனக் கவலைக்கு மருந்தாகிறது. அழுக்காறு, அவா, வெகுளி என்னும் தீய குணங்களை வேரோடுகவ்விஎறிந்து ஆன்மாவைத் தூய்மையாக்குகின்றது.

இசைகேட்டு மிருகங்கள், உயிரற்ற சடப்பொருள்கள் கூட இயங்கின எனப் பல நூல்களிலே கூறப்படுகின்றது. வேதாகமத்திலே புனிதர்கள் பலர் இறைவனுக்குச் சங்கீதங்கள் பலவற்றைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். இவைகளில் தாவீதுமன்னனின்சங்கீதங்கள் சிறப்பானவை. சைவ இலக்கியங்களிலேயும் இப்படியான சம்பவங்கள் உண்டு. செந்தமிழ் முனிவன் அகத்தியரது இசை கேட்டுப் பொதிகைக் கல் கரைந்துருகியது என தொல்காப்பியம் உரைக்கின்றது. கண்ணனின் குழல் இசையால் கார் மேகம் மழை பொழிந்ததாக அழகர் கலம்பகம் கூறுகின்றது. வரி வண்டுகளின் பண்ணிசையால் வண்ணமலர்கள் வாய் நெகிழ்ந்தன என்று குறுந்தொகை கூறுகின்றது. ஆனிரைகள், மதயானைகள், மான் இனங்கள் தேனிசைக்கு மயங்கின என்று சங்க நூல்கள்சான்று பகருகின்றன.

அன்னையின் தாலாட்டின்னிசைகேட்டுகுழந்தை கண்ணயர்கின்றது. நெற்பண்ணையிலே உழுது விதைத்து, அறுப்போர் இசை எழுப்பித் தொழில் புரிகின்றனர். மீன் பிடிப்போர், பாரம் இழுப்போர், தூரவழி நடப்போர் பணிகளிலும் இசை பின்னணியாய் நின்று அவர்களுடைய வேலைச்சுமையைக் குறைக்கின்றது. ஏற்றப்பாட்டு, கப்பற்பாட்டு, அம்மானை, தெம்மாங்கு முதலிய நாட்டுப்பாடல்கள் இதனை வலியுறுத்தும்.

"இசை என்னும் சொல்லுக்கு" இசைவிப்பது, வசப்படுத்துவது என்பது பொருள்.

அறிவற்ற 'மண்' முதலாம் பருப் பொருள்களுமே இசை கேட்டு இயங்கின என்றால் அதன் உயர்வுக்கு நிகருண்டோ?

இசையால்வசமாகா இதயம் எது-இறையே இசை வடிவம் எனும் போது..... என்றான் திரையுலகக் கவிஞன் ஒருவன். இலக்கிய கவிஞர் ஒருவன்

"ஒரு கொடிய விடப் பாம்பும் பேயும் இசை கேட்டு உள் உருகி ஆடும்; கருங்கல் அசைந்து வரும்; அழுத குழவி குரல் அடங்கும், மாடும் இசை கேட்டு உழுது வரும்; வந்த பசுவும் பால் சுரக்கும்; பாடும் இசைகேட்டு உருகாரை என்னென்று உரைப்பேன் பாவலரே" என்றான். இசை இவ்வள்வு தூரம் எல்லாவற்றையும் இசைவிக்க வயப்படுத்தக் கூடியது.

நாம் வெவ்வேறு விதமான இசைகேட்கிறோம் இதை ஆக்கியவர்கள் வெவ்வேறு மொழி பேசும் இசை மேதைகள் ஓர் இசையை நாம் கேட்கும் பொழுது இது ரஷ்ய மேதையால் ஆக்கப்பட்ட இசை என்றோ, அன்றேல் இத்தாலிய இசை மேதையினால் ஆக்கப்பட்ட இசை என்றோ வட இந்திய இசை மேதையினால் ஆக்கப்பட்ட இசை என்றோ இனம்காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த இசைகளில் இருக்கும் வேறுபாடு எவ்விதம் உண்டானது? அந்தந்த இசை மேதைகள் பேசும் வெவ்வேறான மொழியினால் தான் உண்டாவது என்று சொல்லலாம் ஏனெனில் மொழிக்கும் இசைக்கும் அதன் அமைப்பிலும் அதை வெளிப்படுத்தும் வகையிலும் அதிக தொடர்பு உண்டு. மொழியை எடுப்போமானால் அதைப்பேசும் விதத்தில் தொனியின் ஏற்ற, இறக்க வேறுபாடுண்டு! ஒரு சொல் உச்சரிக்கும் நேரத்தைக் குறைத்துக் கூட்டுவதுண்டு. சொற்களிடையில் சில தருணம் மௌனம்காக்கின்றோம். அதே போல் இசையிலும் நேரம், தாளம், வேகம், அழுத்தம் முதலிய முக்கிய பண்புகளுண்டு. மொழிக்கும் இசைக்குமுள்ள இந்த நெருங்கிய தொடர்பினால் நன்மைக்கோ தீமைக்கோ ஒன்றையொன்று பாதிக்கின்றது. இசை மொழி மேல் ஏற்படுத்தும் தாக்கத்தை விடமொழியானது இசை மேல் கூடிய தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது. அத்துடன் மொழியில் இருக்கும் தனித்துவத்தையும் இசைக்குக் கொடுக்கின்றது. ஆகவே தான் ரஷ்ய மொழி பேசும் இசை மேதை ஆக்கிய இசை, இத்தாலிய மொழிபேசும் இசை மேதை ஆக்கும் இசையில் இருந்து வித்தியாசப் படுகின்றது.

அதேபோல் தமிழிசை மேதைகள் ஆக்கும் இசையும் அவர்கள் பேசும் தமிழ் மொழியினால் தனித்துவம் அடைகின்றது.

எத்திக்கும் புகழ் நிறைந்த பாரதி 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்றான். 'தமிழுக்கு அமிழ்தென்று பேர்' என்று இனிமை யூட்டினான் பாரதிதாசன்.

ஒரு சில நிமிடங்களின் முன் இம் மேடையில் சங்கீத வித்துவான் குமாரசாமி தமிழின் இனிமையை அழகாகப் பாடியதை இரசித்தீர்கள். இத்தகைய இனிமையும், பெருமை

---

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

## தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி

ஐந்தாம் நாள் 6-5-1992
புதன்கிழமை நிகழ்ச்சிகள்

மாலை 5.00 மணி தொடக்கம் 6.00மணிவரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| திரு. கே.சந்தானகிருஸ்ணன் | திரு. எம்.முத்துக்குட்டி |
| " வி. பத்மநாதன் | " என்.குஞ்சிதபாதம் |
| " சிவசுப்பிரமணியம் | " எம். யசோதரன் |
| " எம். செல்வக்குமார் | " எம். மூர்த்தி |

6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை பாட்டு

| | | |
| --- | --- | --- |
| செல்வி யசோதா செல்வராசா | — | பாட்டு |
| " பாக்கியலட்சுமி நடராசா | — | வயலின் |
| " எஸ். துரைராசா | — | மிருதங்கம் |

7.00 மணிதொடக்கம் 8.00 மணிவரை பாட்டு

| | | |
| --- | --- | --- |
| செல்வி சியாமளா ஜெயசுந்தரம் | — | பாட்டு |
| " சாந்தநாயகி சுப்பிரமணியம் | — | வயலின் |
| திரு. கே. கண்ணதாசன் | — | மிருதங்கம் |

8.00மணி தொடக்கம் 8.30 மணிவரை சிறப்பு விருந்தினர் உரை

1. திரு.தமிழ்ச் செல்வன் (சிறப்புத்தளபதி, யாழ். மாவட்டம்)
2. திரு. யோகரத்தினம் யோகி (செயலதிபர், விடு

---

## அரச திணைக்களங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் ஓய்வு பெற்றவர்களினால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றோர்கள் தவிர்ந்த ஏனையோரால் ஏற்பட்ட வெற்றிடங்களில் எழுபத்தைந்து சதவீதமானவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(பா)

## இனவாதம் தூண்டியோர் ஐக்கியம்பற்றி பேசுகின்றனர்

### -வாசுதேவநாணயக்கார

இன வாதத்தை அரசியல் இலாபத்திற்காக எவர் பயன்படுத்தினார்களோ அதே காரணத்திற்காக இன ஐக்கியம் என்ற வார்த்தையையும் பிரயோகித்து வருகின்றனர் என வாசுதேவநாணயக்கார தெரி

தெளிவு இல்லாதவரை அதை அடைவது அசாத்தியமே மக்கள் யாவருக்கும் சம உரிமை இருக்க வேண்டும். ஆனால் இவைபற்றி சொல்பவர்கள் அதன்படி நடப்பார்களானால் இன ஐக்கியம் தானாக வே

---

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

செல்வன் செல்வராசா ஜெயகுமார்

தற்போதைய முகவரி; கோணாந்தோட்டம் 41/9 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

என் ஆருயிர்த் தம்பி!

இராணுவ நடவடிக்கையில் இடம் பெயர்ந்து நிற்கையிலே உன் உயிர் எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்ததே. அதை 4ஆம் நாள் நான் அறிந்து பட்ட துயர் யார் அறிவார்? உமது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

அன்பான அக்கா குடும்பத்தினர்

வே. செ. தனஞ்செயன் சாந்தி
நக்காறோட், பிரதீபன் வீதி,

(சி/4360)

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

### 2- ம் லெப்.குகேந்திரன் உத்தமன்

12- ம் கட்டை இறக்கண்டி, நிலாவெளி.

தமிழ் இனத்தின் விடிவிற்காக ஈழத்தின் வித்தாக 06 - 05 - 1991 அன்று இறையடி சேர்ந்துவிட்டாய்! நீ விட்டுச் சென்ற பணி தொடரட்டும் மலரப்போகும் தமிழ் ஈழம் நிச்சயம்.

உன் ஆத்மா சாந்தி வேண்டி
உனது அப்பா, அக்கா குடும்பத்தினர்,
மாமி குடும்பத்தினர் இறை அருளை வேண்டுகின்றோம்.

( சி / 4349 )

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயக மண்ணில் 16 — 08 — 1973



தாயக மீட்பில் 18 — 04 — 1991

வீரவேங்கை றொக்கி
(வரதலிங்கம் செல்வகுமார்)

திதி 06 - 05 - 1992

இளவயதில் இன்பமதை இறுதிவரை ஏற்காமல்
போராடப் புறப்பட்ட "றொக்கி"யவன்
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம்மண்ணைச் சிவப்பாக்கி மாவீரர் வரிசையிலே
தனையிணைத்துக் கொண்டவன்தான்
மடிந்துவிட்டான் பரப்புக்கடந்தானில்
போராட்ட வேளையிலே தமிழ்பேசும் மக்களெல்லாம்
எம்பணியை ஆற்றிடவே புறப்படுவோம் பாசறைக்கு
துப்பாக்கி தனையேந்தி ஒருதளத்தை அமைப்பதற்கு
பல களங்கள் காணுகின்ற
வேங்கைகளுடன் தானிணைந்து
றொக்கியவன் நடந்துசென்ற
பாதமதை நாம் தொடர்ந்து

யோகித்து வருகின்றனர் என வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இன ஐக்கியம்பற்றிய பூரண அதன்படி நடப்பார்களானால் இன ஐக்கியம் தானாக வே தோன்றிவிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.ஆயரின் வெள்ளிவிழா

### ஆசனக் கோயிலில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக பரிசுத்த பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். அவருடன் இலங்கை மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஏனைய ஆயர்களும் யாழ்நகர் வரவுள்ளனர்.

யாழ் ஆசனக்கோயில் முன்றலில் இம்மாதம் 11-ஆம் திகதி யாழ் ஆயரின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் அதிசிறப்பாக நடைபெறவுள்ளன.

பேரருட்திரு வ.தியோகுப்பிள்ளை ஆயராக நியமனம் பெற்று 25-வது ஆண்டு பூர்த்தியையும் குருத்துவம் பெற்று 50-வது ஆண்டு பூர்த்தியையும் ஆயரின்-75-வது பிறந்த தினத்தையும்ஒருங்கிணைத்தே மேற்படி விழா நடைபெறவுள்ளது. (21)


புதிய உயர் கல்லூரி

New College of High Studies

ஆரியகுளம் சந்தி, யாழ்-

A/L 92

DAY CLASSES (PAPER)

ஆரம்பமாகிவிட்டன

A/L 94

புதிய பிரிவு

ஆரம்பம்: 9. 5. 92

A/L 92

சனி ஞாயிறு

PAPER CLASSES

ஆரம்பம்: 17. 5. 92

SPOKEN ENGLISH BY BRITO

புதிய பிரிவு

ஆரம்பம்: 9. 5. 92

காலை 9. 00 மணி

(சி-4366)


### வருடாந்த உற்சவம்

ஊரெழு - சக்திபுரம் சிவ பூரணி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவம்இவ்வாண்டு முதல் தடவையாக நேற்று 5-5-92ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகியது. இவ்வாலயம் புதிதாக கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் கொடியேறி, தேர் இழுப்பது குறிப்பிடத்தக்கது. நேற்று பகல் 11.05 மணிக்கு கொடியேற்று வைபவம் இடம் பெற்றது.தொடர்ந்து 12நாட்கள் திருவிழா நடைபெற்று 13ஆம் நாள் பூங்காவனத்துடன்உற்சவம் நிறைவு பெறும்,

யாழ். மாவட்டம்)

2. திரு. யோகரத்தினம் யோகி (செயலதிபர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி)

3. திரு. தமிழேந்தி (நிதிப்பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகள்)

4. பேராசிரியர் கா. சிவத்தம்பி (தலைவர் நுண்கலைப் (பீடம், யாழ்/பல்கலைக்கழகம்)

8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை பாட்டு

| | | |
|---|---|---|
| திரு. பொன். சுந்தரலிங்கம் | — | பாட்டு |
| ,, ஆர். ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| ,, எஸ். மகேந்திரன் | — | மிருதங்கம் |
| ,, பா. சிதம்பரநாதன் | — | கெஞ்சிரா |

9. 30 மணி தொடக்கம் 10. 30 மணிவரை கெஞ்சிற் கச்சேரி

| | | |
|---|---|---|
| திரு. என். கே பத்மநாதன் | — | நாதஸ்வரம் |
| ,, ஆர். ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| ,, கே. கண்ணதாசன் | — | மிருதங்கம் |
| ,, ரி. உதயசங்கர் | — | தவில் |
| ,, எஸ். நாகராஜன் | — | செஞ்சிரா |
| ,, எஸ். ராஜா | — | முகர்சிங் |


விக்னா கல்விநிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் - யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம் )

O/L SAT - SUN CLASSES

(காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை)

2 ஆம் தவணை பாடத்திட்டம்

ஆரம்பம் : 09 - 05 - 1992

- எமது தனித்துவம்வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு
- அலகு ரீதியான மீட்டல் வினா - விடை வகுப்புகள் இலவசம். (சி/4371)


யதை இரசித்தீர்கள். இத்தகைய இனிமையும், பெருமையும் மிகுந்த மொழி பேசும் தமிழனின் இசை இனிமையிலும் இனிமையாக இருக்க வேண்டுமல்லவா?

ஆகவே தமிழிசை மக்களின் உள்ளங்களில் இனிமையையும் அகில உலகில் பெருமையையும் பெறவேண்டுமெனில் தமிழிசை மேதைகள் மொழிப் பற்றும், தமிழ் மொழியில் ஊறி, தமிழ் உணர்வால் உந்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் இசையினாலே ஒருவனுக்கு மனம் சாந்தியடைய வழி பிறக்கின்றது. தன்னுடைய மொழியின் மீது பற்று வருகின்றது தன்னுடைய பண்பாடு, கலாசாரம், இனம், இவற்றின் மீது பற்று ஏற்படுகின்றது. இவற்றின் வாயிலாக ஒரு இனம் பூரணத்துவம் அடைகின்றது.

ஆகவே இசை என்னும் அரும்பெரும் செல்வம் வளர வேண்டும்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

பண்பாட்டுக்கிசைவாகப் பண் பாட வேண்டும்.

தமிழின் பண் பாட வேண்டும் - வீர வரலாற்றைப் பாட வேண்டும் என்றும்கேட்டுக் கொண்டார்.

### சித்திர சிற்ப பயிற்சி ஆரம்பம்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இணை அமைப்பான சன்மார்க்க நுண்கலை மன்றம் சித்திர சிற்ப பயிற்சி நெறியொன்றினை ஆரம்பித்துள்ளது சனி,ஞாயிறு நாட்களில் காலை9.00மணிமுதல். 12.00மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இப் பயிற்சி நெறியில் பங்குபெறவிரும்புவோர் இணைந்து கொள்ளுமாறு சன்மார்க்க சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வேங்கைகளுடன் தானிணைந்து
றொக்கியவன் நடந்துசென்ற
பாதமதை நாம் தொடர்ந்து
ஈழமதை மீட்டிடவே
புறப்படுவோம் களத்திற்கு!

ஆவரங்கால் (2533) -குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

## 1992-05-06

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு கோயில் போரதீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனானமோதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2 -ம் லெப். வாமதேவன் / மம்பட்டியான்** (பூபாலபிள்ளை பிரதீஸ்வரன்- மண்டூர், மட்டக்களப்பு.)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்,

1991 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

**ஜீவன்** (கணபதிப்பிள்ளை செந்தில்ராஜ் தேவிபுரம், முறக்கொட்டாஞ்சேனை.)

மட்டக்களப்பு கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கபில்** (இராஜரட்ணம் சிவகுமார் - கொம்மாந்துறை, மட்டக்களப்பு.)

மானாண்டான்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

**லெப். உத்தமன்** (வேலாயுதம் குகேந்திரன் 12 ஆம் கட்டை, இறக்கண்டி, திருக்கோணமலை.)

மட்டக்களப்பு / பெரியபுல்லுமலை வெளிச்சாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4370)

Nallur Branch Library

## சிந்தனைக்கு

தன்னம்பிக்கையே வெற்றின்
அடிப்படை இரகசியம்.
— ரால்ப் வால்டோல் எமர்சன்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 06-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 65

## போரை நிறுத்த அரசால் முடியாது

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக் கூடாது என்று மூன்று சிங்கள பிரதான கட்சிகள் முடிவெடுத்திருப்பதாக நம்பப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவையே இவ்வாறு முடிவெடுத்த கட்சிகளாகும்.

சிங்களக் கட்சிகளின் இத்தீர்மானம் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று இல்லை என்பதை தெளிவுபடுத்துவதோடு நீடித்தபோர் ஒன்றும் இரத்தப்பெருக்கும் தவிர்க்க முடியாததாகின்றது.

அண்மைக்காலமாக சிறிலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கள் குறித்தும், அதில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பங்குபற்றியும் பெரியளவில் பேசி வந்தது சிறிலங்கா ஜனாதிபதி, பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனைகள் எதுவானாலும் அரசாங்கம் திட்டவட்டமாக நிறைவேற்றும்எனவும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்பொழுது இரண்டு சிங்களக் கட்சிகளுடன் அரசாங்கக் கட்சியும் கூட்டுச் சேர்ந்தமையானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டம் எந்த நிலையில் வெளிவரும் என்பது தெட்டத்தெளிவாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுமுன் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் தெரிவுக் குழுவில் இவ்விரு கட்சிகளின் பிரதிநிதிகளே பெரும்பான்மையானவர்கள் ஆவர். இவர்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கவில்லையானாலும் தற்பொழுது பிரதான சிங்களக் கட்சிகள் மேற்கொண்டுள்ள வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பதென்ற இரகசிய உடன்பாடு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம் எவ்வாறானதாக இருக்கும் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் பாராளுமன்றத்தெரிவுக்குழு முன்வைக்கும் தீர்வுத் திட்டமும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணாது எனத்திட்டவட்டமாகக் கூறலாம்

இதேவேளை சிறிலங்கா அரசாங்கத்தில் எதிர்காலத்திலும் எந்தவித அரசியல்மாற்றங்கள்ஏற்படினும் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு ஏற்பட்டு விடப் போவதில்லை. ஏனெனில் ஐக்கிய தேசிய கட்சிக்கு

# ராஜீவ் காந்தியின் தவறான கொள்கையை இந்தியா தொடர்ந்து பின்பற்றக் கூடாது

**- ப. நெடுமாறன்**

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான ப. நெடுமாறன் அண்மையில் லண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ்நேசன்' இதழுக்கு அளித்த பேட்டியின் முழுவிபரமும் இங்கே தரப்படுகின்றது.

**கேள்வி**

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராக இந்திய ஆட்சியாளர் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்**

பாரிய தேசிய இயக்கம் ஒன்றின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனை இக்கொலையுடன் தொடர்பு படுத்துவது சிறுபிள்ளைத்தனமானது. இச்செயல் அரசியல் நோக்கமுடையது என்பது தெளிவானது

ராஜீவ்காந்தி விசாரணை தொடர்பாக விசாரணைமேற்கொண்டுஅறிக்கை சமர்ப்பிக்க இருஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்த ஆணைக்குழுக்கள் எந்த முடிவுக்கும் வரவில்லை எவர் மீதும் குற்றம் சுமத்தவுமில்லை. ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அங்கமான விசேடப் புலனாய்வுப் பிரிவு விடுதலைப் புலிகளின் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வழியைத் தெரிந்தெடுத்திருக்கிறது. அதுவும் சாதாரண சட்டத்தின் கீழ் அல்லாமல் பயங்கரவாதம் மற்றும் அழிவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1987 (டாடா) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஹரியானாவைப் போல் தமிழ்நாடு டாடா சட்டத்தின் கீழ் 'பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசமாக இல்லாத போதும் டாடா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. டாடா சட்டத்தின் கீழ் சாட்சியம் தொடர்பான சாதாரண சட்டங்கள் செல்லுபடியாகாது. ஆனால் டாடா சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரினால் வழங்கப்படும் வாக்குமூலம் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இன்னொருவருக்கு எதிராகப் பாவிக்கப்படலாம். டாடா சட்டத்தின் கீழ் குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டும் சாட்சியை (வாதி)ச்சார்ந்திருப்பதில்லை.

சாதாரண சட்டங்களுக்குப் புறப்பான வகையில் டாடா சட்டத்தின் கீழ் தலைவர் பிரபாகரன் மீது குற்றஞ்சாட்டுவது தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும், தமிழீழத் தமிழர்களுக்குமிடையே வளர்ந்து வரும் இணைப்பைச் சீர்குலைக்க எடுக்கப்படும் விஷமத்தனமான முயற்சியாகும். சிறிலங்காவில் பயங்கரவாதத் தடைச் சட்டமான பி.ரி.ஏ. விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதில் தோல்வி கண்டதுபோலவே டாடா சட்டப் பிரயோகமும் தோல்வியுறும். காலனித்துவ ஆட்சியாளர்கள் இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்ற பின்னர் இந்தியத் தலைவரான நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தினர். அதே வழியில் தான் இந்தியாவும் தற்போது



நடந்து கொள்வதாகப் படுகிறது. ஆனால் இந்திய மக்களின் இதயங்களிலிருந்து நேதாஜி சுபாஸ் சந்திரபோஸை அகற்றிவிட பிரித்தானிய ஆட்சியாளர்களால் இயலவில்லை அதேபோலவே தமிழ் மக்களின் இதயங்களிலிருந்து பிரபாகரனைப் பிரித்துவிட இந்திய அரசினால் முடியாது. இந்தியா இந்த முயற்சியிலும் தோல்வியுறும் என்பது நிச்சயம்.

**கேள்வி**

தமிழ்நாட்டு மக்கள் தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக திரும்பியுள்ளதாக சில வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றதே. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக தமிழக மக்கள் திரும்பிவிட்டார்கள் என்று கூறப்படுவது முழுப் பொய்யாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திரும்பியுள்ளார்கள் என்று கூறப்படுவதும் அதே அளவுக்கு முழுவதும் பொய்யாகும். தமிழக மக்களின் உணர்வுகள் அடிமனதில் குமுறிக் கொண்டிருக்கின்றன என்பதும் ஒரு சமயம் மேலெழும் என்பதும் நிச்சயம் தற்போதைய குழப்பமான சூழ்நிலை ஒருநாள் மறையும் போது தமிழீழச் சகோதரர்கள் நடத்தும் போராட்டத்திற்கான வெளிப்படையான ஆதரவை தமிழகம் வழங்கும்.

**கேள்வி:**

நீங்கள் மேற்கொண்டிருக்கும் ஐரோப்பிய சுற்றுப்பயணம் அரசியல் அடைக்கலம் தேடும் ஒரு முயற்சி என்று சண்டே ஐலண்ட் பத்திரிகையின் கட்டுரையாளர் தாரகி குறிப்பிட்டிருப்பதை பார்த்து நான் அதிசயித்துப்போனேன்.

**பதில்:**

நான் எங்கும் அரசியல் புகலிடம் கோரப்போவதில்லை. அரசியல் புகலிடம் கோரவேண்டிய தேவை எதுவும் எனக்கு இல்லை தமிழ்நாட்டில் நானொரு அரசியல் கட்சியின் தலைவர் தமிழீழப் போராட்டம் தொடர்பாக எமது கட்சிக்கு தெளிவான தொரு பார்வை உண்டு. இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் நான் இதைப் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியுள்ளேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது அபிப்பிராயங்களை மறைக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் பேரால் ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற வகையில் எனக்குரிய அரசியல் கடமைகளை நிறைவேற்ற இந்தியா திரும்பிய பின்பும் நான் செயற்படுவேன் இதற்காக நாளை அடக்கு முறைகளுக்கு இலக்காகநேரிட்டால் இந்தியாவின் உள்ளேயே அவற்றிற்கு முகங்கொடுக்கவும் நான் தயாராகவே இருக்கிறேன். இப்படியான சம்பவங்கள் நேரும் என்ற அச்சத்தால் நான் எந்த நாட்டிலும் அரசியல் புகலிடம் கோரப் போவதில்லை.

**கேள்வி :**

இந்தியா இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென விரும்புகின்றது. இது பற்றிஉங்கள் எண்ணம் என்ன?

**பதில்**

தமது தாயகத்தில் அமைதி இல்லை என்பதால்தான் அகதிகள் தமிழ் நாட்டிற்கு வந்தார்கள். ஆயுதம் தாங்கிய போராட்டம் நடைபெறுவதால் இராணுவத்தினரதும், துணைப் படைகளினதும் செயற்பாடுகளுக்கு அஞ்சித் தான் அவர்கள் வந்தார்கள். இந்த நிலைமை இன்று மாறி விடவில்லை. அமைதி நிலை திரும்பிய பின்னர் அகதிகள் திரும்பிச் செல்வது தான் சரியானது. தமிழ் நாட்டின் அகதி முகாம்களிலிருந்து சிறிலங்கா அகதி முகாம்களுக்கு இடம் மாற்றுவதென்பது ஆரம்ப அடிப்படை மனித உரிமைகளை மறுக்கும் செயலாகும். திபெத்திய அகதிகளும், தலாய்லாமாவும்இன்னமும் இந்தியாவிலேயே வசிக்கின்றனர். பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பிற இடங்களிலிருந்து வந்த அகதிகளும் இந்தியாவிலேயே வாழ்கின்றனர். இந்தியா அவர்களையெல்லாம் துரத்தவில்லைஇந்தியா. தமிழ் அகதிகளின் பொறுப்பை ஏற்க விரும்பாது விட்டால் யு. என். எச். சி. ஆர். போன்ற நிறுவனங்களிடம்அதைக்கையளிப்பது தான் முறையானது. இவ்விவகாரத்தைக்கையாள்வதற்குரிய பொருத்தமான முறை அதுதான். ஆனால் அதை விடுத்து தமிழ் அகதிகளை சிங்கள அரசாங்கத்திடம் கையளிப்பதென்பது கொலைக்களத்திற்கு அனுப்புவதிலிருந்து வேறு படுத்திப்பார்க்க முடியாதது.

**கேள்வி:**

தமிழீழப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு எப்படி இருக்க முடியும் எனக் கருதுகிறீர்கள்?

**பதில்:**

இந்திரா காந்தி காலத்தில தமிழீழப் போருக்கு சார்பான ஒரு நிலையை இந்தியாகடைப் பிடித்தது. ஆனால் ராஜீவ் காலத்தில் முற்று முழுதாக மாறிப்போய்விட்டது. நேருவினதும், திருமதி இந்திரா காந்தியினதும் காலத்தில் இந்தியா உலகின் பல பாகங்களிலும் நடந்த விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்த அதேஇந்தியா ராஜீவ் காலத்தில் அமைதிப்படையை அனுப்பி தமிழீழப் போராட்டத்தை நசுக்க முயன்றது. தவறான வழிகாட்டுதல்களில் ராஜீவ் காந்தி தோற்கடிக்கப் பட்டவரானார். இந்திய அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் இதனையுணர்ந்து தமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து ராஜீவின் பாதையில் தொடர்வது ஏற்கனவே பழைய தவறுகளை மேலும் சிக்கலாக்குவதற்கு மட்டுமே உதவும். தமிழீழ மக்கள் எப்போதும் இந்தியாவின் ஆதரவை எதிர்பார்த்துள்ளார்கள் என்பதை நான் நன்கறிவேன், இப்போது கூட இந்தியாவை நோக்கி அவர்கள் அன்புக்கரத்தையே நீட்டுகின்றார்கள். இந்த அன்புக் கரத்தைப் பற்றிக் கொள்ள இந்தியர் தவறக்கூடாது. நட்புணர்வுடன் இந்த அன்புக் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளை இந்தியா திருத்திக் கொள்ள வேண்டும்.

## ரஷ்யா இந்தியாவுக்கு அறிவிப்பு

## வர்மா கமிஷன் தமிழகத்தில் 25 ஆண்டு காலமாக

இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு ஏற்பட்டு விடப் போவதில்லை. ஏனெனில் ஐக்கிய தேசிய கட்சிக்கு மாற்றீடாக ஆட்சிக்கு வரக் கூடிய சுதந்திரக் கட்சியும் இவ் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதெனை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கம் கண்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினதும், ஏனைய இரு கட்சிகளினதும் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதென்பது தனியாக பௌத்த பேரினவாத சிந்தனையால் எழுந்ததல்ல. இன்றைய நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் சரி, ஏனைய சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் சரி, வடக்கு - கிழக்கு யுத்தம் அவசியமாகிறது.

இன்று நாட்டில் தீவிரமடைந்துள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகள் காரணமாகசிறிலங்கா அரசாங்கத்திற்குப்போரைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிர வேறுவழி இல்லை. நாட்டிலுள்ள வேலையில்லாப் பிரச்சினை, விரக்தி, விலையேற்றம். வறுமை என்பன பெரும் அரசியற் கொந்தளிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன. இந் நிலையில் போரே சிங்கள மக்களைத் திசை திருப்பி வைத்துள்ளது. போரை நிறுத்திச் சமாதானம் பேச அரசாங்கம் முற்படுமேயானால், அது அரசாங்கத்திற்கு ஒரு தற்கொலைக்கு ஒப்பான விடயமாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், சிறிலங்கா இராணுவம் இன்று அரசியலில் பெரும் பலம் பொருந்திய சக்தியாக மாறியுள்ளது. சிறிலங்கா அரசியலில் இராணுவத்தைப் புறந்தள்ளி அரசியல் நடத்தக்கூடிய சக்தியை [அரசாங்கம் இழந்துள்ளது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வரினும், இராணுவத்தின் உதவியின்றி ஆட்சி நடாத்த முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் இராணுவமோ விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை நடாத்துவதற்கோ அன்றி, யுத்த நிறுத்தம் செய்வதற்கோ தயாராக இல்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது படை எடுத்து இராணுவ வெற்றி ஒன்றை அடைய வேண்டும் என எண்ணுகின்றது.

இந்நிலையில் அரசாங்கமும் ஏனைய அரசியற் கட்சிகளும் விரும்பியோ விரும்பாமலோ யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன. ஆனால், இவற்றின் விளைவு எதிர்மறையானதாகவே அமையும். அதாவது சமாதானத்திற்கான கதவுகளை சிறிலங்கா அரசாங்கம் மூடுவது தமிழர் தேசிய இனப் போராட்டத்திற்கு கேடு விளைவித்து விடப் போவதில்லை! மேலும் போராட்டத்தை எழுச்சி கொள்ளவே செய்யும்.

ரஷ்யா இந்தியாவுக்கு அறிவிப்பு

# ராக்கெட் தொழில் நுட்பம் வழங்கத் தடையில்லை

(டில்லி)

விண்வெளி ஆய்வுக்கான ராக்கட் தொழில் நுட்பத்தைப் பெறுவது குறித்து இந்தியா கவலையடைய வேண்டிய தேவை எதுவுமில்லை என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சரான டாக்டர் ஜெனாடி புர்புலிஸ் கூறியுள்ளார். தற்போது புதுடில்லி வந்திருக்கும் அவர் மேலும் கூறுகையில் இந்திய-ரஷ்ய ஒப்பந்தம் எதுவும் நிறுத்தி வைக்கப்படவில்லை. ஆனால் நடைமுறை ரீதியில் சிறிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் யெல்ட்சினிடமிருந்து விசேட செய்தியொன்றை பிரதமர் நரசிம்மராவிற்கு எடுத்து வந்த டாக்டர் புர்புலிஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்தியாவிற்கு மாஸ்கோ அதிக மதிப்பளிக்கிறது என்றும் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் சிதைவடைந்த பின்னர் ரஷ்யாவிலிருந்து புதுடில்லிக்கு வந்துள்ள முதலாவது உயர்மட்ட தூதுக்குழுவிற்கு டாக்டர் புர்புலிஸ் தலைமையேற்று வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின்

# நவீன ஏவுகணை பிரித்வி நேற்று ஏவப்பட்டது

இந்தியாவில் அதி நவீன ஏவுகணையான பிரித்வி ஒரிசா மாநிலம் சாந்திப்பூர் கடற்பரப்பில் சோதனை அடிப்படையில் நேற்று ஏவப்பட்டது.

நேற்றுக்காலை 9.00 மணியிலிருந்து பி.ப.2மணிக்கு ஏவப்பட்டது.

இந்திய பாதுகாப்புத் துறைக்கு வல்லமை சேர்க்கும் இந்த ஏவுகணை தரையிலிருந்து இன்னொரு இலக்கைநோக்கிப்பாயக்கூடிய திறன் படைத்தது.

ஏற்கனவே ஆந்திரமாநிலத்தில் பரிசோதித்துப் பார்க்கப் பட்டது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

# மகளிர் பிரிவுத் தலைவியாக வின்னி மண்டேலா தெரிவு

(ஜோகான்ஸ்பேர்க்)

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் மகளிர் பிரிவுத் தலைவியாகதிருமதி வின்னிமண்டேலா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் தலைவராக இருக்கும் டாக்டர் நெல்சன்மண்டேலா அண்மையில் திருமதி வின்னிமண்டேலாவை விவாகரத்துச் செய்தமை தொடர்பாகப் பலத்த சர்ச்சைகள் இடம்பெற்றுள்ள போதிலும் அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வர்மா கமிஷன்

## விசாரணை பூர்த்தி

முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ்காந்தியின் படுகொலைக்கு காரணமாக இருந்த பாதுகாப்பு ஏற்பாட்டின் குறைபாடுகளை விசாரித்து அறிவதற்காக அமைக்கப்பட்ட வர்மா கமிஷன் நேற்று முன்தினம் தனது விசாரணைகளை முடித்துக் கொண்டது.

கமிஷனின் தலைவர் பதவியிலுள்ள சுப்ரீம் கோட் நீதிபதி ஜே. எஸ். வர்மா அடுத்த வார நடுப்பகுதிக்குள் அறிக்கையை சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாரதிதாசன் விருது

தமிழக அரசால் வழங்கப்படும் பாவேந்தர் பாரதிதாசன் விருது இவ்வாண்டு கவிஞர் சி. முத்துராமலிங்கத்துக்கு வழங்கப்படுகிறது.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 10, 000 ரொக்கப்பணமும் தகுதியுறையும் பாவேந்தர் பாரதிதாசன் விருதும்அவக்கு வழங்கப்படுகிறது.

## அமெரிக்க கொடி எரிப்பு

(வாஷிங்டன்)

லொஸ் ஏஞ்சல்சில் இடம் பெற்ற இனக்கலவரங்களை அடுத்து நியூயோர்க்கில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது அமெரிக்கதேசியகொடி எரிக்கப்பட்டது.

கறுப்பு இனத்தவர் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் போதே இந்த கொடி எரிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தமிழகத்தில் 25 ஆண்டு காலமாக

# ஆட்சிக்கு வருபவர்களால் பத்திரிகைகள் பல பாதிப்பு

## - கூட்டுச்சேர் கமிட்டி

கடந்த 25 ஆண்டுகளாக தமிழக பத்திரிகைகள் ஆட்சிக்கு வருகின்ற பல்வேறு ஆட்சியாளர்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்போது உள்ள ஆட்சியில் மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் வேண்டாத பத்திரிகைகள் கொளுத்தப்பட்டன. நேரடியாகவே எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன விளம்பரங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழகபத்திரிகையாளரின் கூட்டுச்சேர் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் தமிழக சட்டப் பேரவையில் பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர்க்கப்படாமல் போனது ஏமாற்றம் அளிக்கின்றதென்றும் எனவே மேற்கூறிய நிலைமைகளைப் போக்க அனைத்துத் தரப்பினரும் ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும்அவ்வாறு பத்திரிகைகள் மீது விசாரணை நடாத்த வேண்டும் என ஒம்புஸ்மன் அமைக்கப்படுவதை சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவும் எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் வரவேற்றிருப்பதனை பத்திரிகையாளர் அமைப்புகளின் கூட்டுச் சேர் கமிட்டி வரவேற்றிருக்கிறது.

# இந்தியாவும் ரஷ்யாவும் இருதரப்பு உடன்படிக்கை

## -புதுடில்லியில் கைச்சாத்து

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் இருதரப்பு உறவையும் வலுப்படுத்தும் இரு உடன்படிக்கையில் இருநாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

வர்த்தகம்' பொருளாதார ஒத்துழைப்பின் குறித்த உடன்படிக்கையை வர்த்தகதுறை அமைச்சர் பா. சிதம்பரமும் இந்தியாவுக்கு வருகை தந்துள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் டாக்டர் புர்வலிஸ்சும் கைச்சாத்திட்டுள்ளனர்

வாணிபம், பொருளாதாரம் அறிவியல் தொழில்நுட்ப ரீதியில் இரு அரசுகளுக்கு இடையிலும் கமிஷன் அமைப்பது குறித்து இரண்டாவது உடன்படிக்கையை டாக்டர் புர்வலிஸ்சும் வெளியுறவுத்துறை இணையமைச்சர் எட்வடே லெலேரோவும் கைச்சாத்திட்டனர்.

மேற்கூறிய இரு உடன்படிக்கைகளும் ஐந்தாண்டு காலம் அமுலில் இருக்கும்.

அரசு ஒப்பந்தத்தில் சிறப்பாக குறிப்பிடப்படாத வரை எல்லாவகையிலும் பணம் செலுத்தும் எளிதாக மாற்றல் செய்யக்கூடிய செலாவணி முறையில் இருக்கும் என்பதுதான் இந்த வர்த்தகபொருளாதார உடன்படிக்கை குறித்த முக்கிய அம்சமாகும்.

ஈழநாதம்

# இந்தியாவின் வல்லாதிக்க போக்கை அமெரிக்கா கட்டுப்படுத்த வேண்டும்

(நியூயோர்க்)

தென் ஆசியாவிலுள்ள ஏனைய நாடுகள் மீது இந்திய அரசு வல்லாதிக்கம் செலுத்துவதை அமெரிக்கா கட்டுப்படுத்த வேண்டுமென்றும் பாகிஸ்தானுடன் மீண்டும் இராணுவ உறவை வளர்த்து தென் ஆசியாவில் இராணுவ சமபலத்தையும் ஸ்திர நிலைமையையும் பேண வேண்டுமென்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு தயாரித்துள்ள மிகவும் இரகசியமான கொள்கை வகுப்பு ஆவணம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டிய இராணுவ அரசியல் கொள்கைகளை எடுத்து விளக்கும் இந்த இரகசிய அறிக்கையிலுள்ள சில முக்கிய விடயங்களை 'நியூயோர்க் டைம்ஸ்' என்ற பிரபல அமெரிக்க தினசரி சமீபத்தில்

## பாதுகாப்பு அமைச்சு சிபார்சு

அம்பலப்படுத்தியது.

பாகிஸ்தானை அந்நியப்படுத்துவது அமெரிக்க பூகோள நலன்களுக்கு பேராபத்தாக முடியுமெனவும், பாகிஸ்தானை ஒதுக்கினால் அது ஈரான் அல்லது சீனாவுடன் இணைந்து அமெரிக்க எதிர்ப்பு சக்தியாக மாறி விடலாமெனவும் இந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ''வளைகுடா நாடுகளுடன் பாகிஸ்தான் நல்லுறவை கொண்டிருக்கிறது வளைகுடா பிரதேசத்திலும் தென்ஆசியாவிலும் அமெரிக்க நலன்கள் பேணப்படுவதற்கும் இப் பிரதேசங்களில் ஒரு ஸ்திரமான இராணுவ அரசியல் நிலைமை உருவாகுவதற்கும் பாகிஸ்தானுடன் அமெரிக்கா நல்லுறவை புதுப்பிக்கவேண்டும். பாகிஸ்தானின் இராணுவ தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆயினும் அதேவேளை அணுவாயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் கைச்சாத்திட வைப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்'' என்று இந்த ஆவணத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''அமெரிக்காவுக்கு விரோதமாக எந்தவொரு வல்லரசையும் மேற்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தலை தூக்கி விடக்கூடாது என்பதையே அமெரிக்கா தனது பிரதான கொள்கையாக கடைப்பிடிக்க வேண்டும்'' எனவும் இந்த இரகசிய அறிக்கை கூறுகிறது.

# இனத்தின் தேசிய தன்மையை காக்க போராடுகிறோம்

## தமிழிசை விழாவில் ஜெயா

(யாழ்ப்பாணம்)

''நாம் தமிழ்த்தேசியஇனம். எமக்கென்று ஓர் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்ட கலை வடிவங்கள் உண்டு. இக்கலை வடிவங்கள் தனித்துவமானவை இவ்வாறான அம்சங்களைக் கொண்ட எமது இனத்தின் தேசியத் தன்மையை அழிய விடாது பாதுகாப்பதற்காகவே நாம் போராடுகிறோம்''

இவ்வாறு நேற்றுமாலை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் ஆதரவில் நல்லூரில் நடைபெற்ற தமிழிசை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார். பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாம் எமது இனத்தின் தனித்துவத்தையும், எமது கலை வடிவங்களின் தனித்துவத்தையும் இவ்வாறான இசைவிழாக்கள் மூலம் உலகிற்கு எடுத்துக் காட்டி வருகிறோம். இன்று தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் எமது தேசியத் தன்மையைப் பேணிப் பாதுகாப்பதற்கும், கட்டி வளர்ப்பதற்கும் அனைவரும் அணிதிரண்டு தோளோடு தோள் நின்று போராட முன்வரவேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

## தமிழிசை விழாவில் கலைஞர்கள் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக்கலைஞர்கள் சங்கமிக்கும் தமிழிசை விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானத்தில் கோலாகலமாக நேற்று நடைபெற்றது.

மாலை 5.00 மணியளவில் விழா ஆரம்பமானதும் மங்கள இசை முழங்கியது; மங்கள இசை ஆரம்பித்ததும் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சாரி சாரியாக வந்த மக்கள் கூட்டம் மைதானத்தை நிரப்பிக் கொண்டது. இதனால் மைதானம் ஜனசமுத்திரமாகக் காட்சி அளித்தது. மைதானமும் சுற்றுப்புற வீதிகளும் வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

மங்கள இசையைத் தொடர்ந்து பல இசை நிகழ்வுகள் இடம் பெற்றன. தொடர்ந்து சிறப்புவிருந்தினர்களாக சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இதைத் தொடர்ந்துமேலும் சில இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

## எழுதுவினைஞர் தெரிவு

## 11 ஆம் திகதி செயலகத்தில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எழுதுவினைஞர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை 11 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளது.

அண்மையில் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சுமார் 48 பேர் மட்டுமே முதற்கட்டமாக இந் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதம் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஏனையோர்க்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள் பற்றிய முடிவுகள் இதுவரை எடுக்கப்படவில்லை என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

## அத்தியாவசிய தேவைக்கு முன்னுரிமை வழங்கப்படும்

யாழ். செயலகத்தில் உள்ள மாவட்டப் பதிவாளர் அலு

வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## தமிழீழப்

கனாக, தமிழீழப் பெண்ணினம் சமூக அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகிறது. அரச பயங்கரவாத அடக்குமுறை ஒருபுறமும், தொடரும் போர்ச் சூழ்நிலையின் தாக்கங்கள் மறுபுறமுமாக பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினைகளை இனம்கண்டு, அவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் வேலைத்திட்டங்களை அமைத்து மகளிர் முன்னணி செயற்பட்டு வருகிறது. பெண்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதானால் முதலில் பெண்களை

# இந்தியா, ரஷ்யா மீது பொருளாதாரத் தடை

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இந்தியாவும் - ரஷ்யாவும் விண்வெளித் தொழில் நுட்பம் தொடர்பாக செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் பயன் படுத்தினால் இரு நாடுகள் மீதும் பொருளாதாரத் தடையை மேற்கொள்ள வேண்டி வரும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்தியதாகவும் பொருளாதார தடை பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் அமெரிக்க வெளிவிவகார அதிகாரி ஒருவர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

இதேவேளை ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஏவுகணை தொழில் நுட்பத்தை இந்தியாவுக்குத்தான் விற்பனை செய்ய விரும்பதாக ரஷ்யா நேற்று அறிவித்தது. ஏற்கனவே ஏவுகணை தொழில் நுட்பத்தை ரஷ்யா இந்தியவுக்கு விற்றுள்ளது.

இந்திய - ரஷ்ய ஏவுகணை வர்த்தகத்தை அமெரிக்கா எதிர்த்துள்ள போதிலும், இந்தியாவுடன் தான் செய்து கொண்டுள்ள புதிய வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் ஏவுகணை தொழில் நுட்ப விற்பனையை நிறுத்தப்போவதில்லை என்று ரஷ்யாவின் துணைப் பிரதமர் கேனாடி பேர்போனிஸ் அறிவித்திருக்கிறார்.

இந்தியாவில் மூன்று நாள் அரசமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு புதுடில்லியிலிருந்து புறப்படுமுன் அவர் பேசுகையில், அனைத்துலக நாடுகள் சட்டங்களை மீறுகின்றனவா என்று கண்காணிக்கும் ஒரு பொலிஸ்காரனைப்போல் அமெரிக்கா நடந்து கொள்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

ரஷ்யா இந்தியாவுக்குப்பாதுகாப்புத்துறை உதிரிப் பாகங்களை தொடர்ந்து வழங்கு மென்றும் இந்த ஆண்டின் பிற்பகுதியில் ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணம் வரும்போது இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் புதிய நட்புறவு ஒப்பந்தத்துக்குக் கைச்சாத்திடப்படும் என்றும் பேர்போனிஸ் தனது பயணத்தின் இறுதியில் செய்தியாளர் மத்தியில்பேசும் போது கூறினார்.

## புலிகளை

ரான ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதால், அதனைத் தடை செய்வதற்கு ஏன் இவ்வளவு தயக்கம் காட்

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தினால் குடாநாடு பூராவும் நடாத்தப்பட இருக்கும் விளையாட்டுப்போட்டி, கல்விக்கண்காட்சி ஆகியவை தொடர்பான ஏற்பாடுகளை செய்யும் பொருட்டுவிசேட ஆலோசனைக்கூட்டம் ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள

## கொர்பசேவ் இரண்டுவார அமெரிக்க விஜயம்

முன்னாள் சோவியத் தலைவர் மிகைல் கொர்பசேவ் பதவி இழந்தபின் முதல் தடவையாக அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார்.

இரண்டு வார விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கொர்பியினை முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் றேகன் விமான நிலையத்தில் வரவேற்றார்.

தனது புதிய உலக ஒழுங்கு பற்றிய செய்தியை பரப்பும் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கொர்பியை 500 பேர் கொண்டகூட்டம்வரவேற்றது

ஒன்பது நகரங்களுக்கு விஜயம் செய்யும் கொர்பி ஜனாதிபதி புஷ், முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், ஐ. நா. பொதுக் காரியதரிசி பூட்ரோஸ் காலி ஆகியோரைச் சந்திப்பதுடன், இரு சபைகளையும் கொண்ட அமெரிக்க காங்கிரஸிலும் உரையாற்றுவார். மிசோனி புல்டன் வெஸ்ட் மினிஸ்ரர் கல்லூரியில் சம்பிரதாய பூர்வமாக கெடுபிடி யுத்தத்தை முடித்து வைக்குமாறு கொர்பசேவ் அழைக்கப்பட்டிருக்கிறார்.

## டில்லியில் தீ விபத்து; 3 மாடிக் கட்டடம் நாசம்

டில்லியில் மகாநகர் ரெலிபோன் கார்ப்பரேசன் அமைந்துள்ள சித்வரி பவனில் நேற்று

பிடவில்லை. இவ்விபத்திற்கான காரணங்களைக் கண்ட


யாழ். செயலகத்தில் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான முன்னுரிமை உத்தரவைப் பெறுவதற்கான நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சான்றிதழ்களை பெறுவதற்கான விண்ணப்பதாரர்களின் தொகை அதிகரித்து வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 9 30-11.00 மணிவரையில் தம்மால் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் முன்னுரிமை உத்தரவுகள் வழங்கப்படுமென்று யாழ் மாவட்ட செயலக மேலதிகப்பதிவாளர் திரு. அ.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (24)

# 45-ம் நாள நினைவஞ்சலி

வீர ஜனன 09 - 05 - 67



வீர மரணம் 23 - 03 - 1992

**கப்டன் மணாளன்**

(சண்முகநாதன் சிறிராம்)

பாசமாய் பழகி கூடித்திரிந்த கிளி
பாசமதை மறந்து பாசறைக்குப் போனது
சாவு அவனை அணைத்தது சரித்திரம் படைத்தது
சற்று அதிர்ந்தோம் சஞ்சலப்பட்டோம் - எனினும்
புலரும்பொழுது எல்லாம் மலர்வாய் எம்முன்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூளாய். சிறி கிருஷ்ணா பாணக நண்பர்கள்.

(2543)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...நடைமுறைப்படுத்துவதானால் முதலில் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்தே ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைக்க மகளிர் முன்னணி முடிவெடுத்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும், குறிக்கோள்களும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள், தரவுகள், பட்டறிவு விபரங்கள் ஆகியவற்றைச் சேர்ந்து தொகுத்தல்.

2. சமூகவியல்ஆய்வுக்கான பிரச்சினைகளை இனம் காணுதல் கோட்பாடுகளுக்கும கருத்துருவங்களுக்கும் தெளிவான வரைவிலக்கணங்களை நெறித்தல், ஆய்வு முறையை வகுத்தல் வேலைததிட்டங்களின் செயற்பாட்டுத் தன்மையை பரிசீலனை செய்தல்.

3. தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து அறிதல்

4. இந்த ஆய்வு நிறுவனம் தமிழீழப பெண்கள்பற்றியதகவல் மையமாகவும்செயற்படும்

5. இந்த ஆய்வு நிறுவனம் சர்வதேசப் பெண்கள் ஆய்வு நிறுவனங்களுடனும், மற்றும் பெண் உரிமைக்காகப் போராடும் உலக மகளிர் அமைப்புகளுடனும் தொடர்புகளை அமைத்துச் செயற்படும்.

பொதுவாக பெண்கள் பற்றியும், குறிப்பாகத் தமிழீழப் பெண்கள் சம்பந்தமாகவும் ஆய்வுநூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், மற்றும் ஆவணங்களை இவ் ஆய்வு நிறுவனத்துக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் இராஜ வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

...அதனைத் தடை செய்வதற்கு ஏன் இவ்வளவு தயக்கம் காட்டுகிறது என்பது தனக்குப் புரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் திருப்பதியில் நடைபெற்ற காங்கிரஸ் [ஐ] மாநாட்டில் புலிகளை தடை செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டமையையும் அவர் குறிப்பிட்டுள்ளார்

மேலும்காலம் தாழ்த்தாமல் தேசிய நலனை முன்னிட்டு புலிகளை தடை செய்யும் அறிவிப்பை உடனடியாக வெளியிடுமாறு இந்த அறிக்கைமூலம் மத்திய அரசை ஜெயலலிதா கேட்டுள்ளார்.

## வாழப்பாடி அதிர்ச்சி

''முன்னாள்பிரதமர் ராஜீவ் காந்திவிடுதலைப்புலிகளினால் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதே அந்த அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்பதற்குப் போதுமான ஆதாரமாகும்'' என இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது. உள்துறை அமைச்சர் தெரிவித்தகருத்து அதிர்ச்சி தரக்கூடியதாக உள்ளது என்றும்,

மேலும் சவான் வெளியிட்ட இக்கருத்தின் காரணமாக ராஜீவ்காந்தியைப்படுகொலை செய்த உண்மையான குற்றவாளிகள் தப்பி விடக்கூடும் எனவும்,

இதேவேளை தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிகளும், தமிழக அரசும் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்று கோரி வருகின்றன. எனவே இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட மே 21 ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் எனவும் வாழப்பாடி ராமமூர்த்தி தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

...நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கல்விக்கோட்டங்களுக்கு பொறுப்பாக உள்ள பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பாடத்துறைகள் சார்ந்த உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் இக் கூட்டத்திற்கு தவறாமல் சமுகம் தரும்படி யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (பா)

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொருபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

## மேதினம்

...கிய ஸ்பானிய, இத்தாலிய, லெபனானிய அமைப்புக்கள் மற்றும் சுவிஸ் தொழிற்சங்கங்கள் பலவும் கலந்து கொண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஊர்வலங்களின் போது ,,சர்வதேச சமூகமே தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரி' ''வட பகுதிக்கான பொருளாதார தடையை நீக்கு'' ''தமிழீழ மக்களின் தேசிய தலைவர் பிரபாகரன்''என்ற கோசங்கள் கிளப்பப்பட்டன.

இவ் ஊர்வலங்களின் இறுதியில் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

...போன் கார்ப்பரேசன் அமைந்துள்ள சித்ஹரி பவனில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று மாடிக் கட்டடம் முற்றாக சேதமடைந்தது. சுமார் நாற்பது தீ அணைப்பு இயந்திரங்கள் இரண்டு மணி நேரம் போராடித் தீயைக் கட்டுப்படுத்தின.

இதனையடுத்து பொலிஸ், மற்றும் தீயணைப்பு உட்பட எல்லா சிறப்பு சேவைகளும் டில்லியில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இந்தியன் ஏயர் லைன்சின் பயணப் பதிவுகளும் இதனால் பாதிக்கப் பட்டுள்ளது.

இத்தீவிபத்தினால் சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்பின் பெறுமதி இன்னமும் மதிப்...

...கான காரணங்களைக் கண்டறிய புலனாய்வுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## ரொமேஷ்பண்டாரி

...னதாக எதிர்க்கட்சித்தலைவி சிறிமா பண்டார நாயக்கா. அனுரா பண்டார நாயக்கா மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் சந்தித்துப் பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவே இந்தச் சந்திப்பின்போது பேசிக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# மரண அறிவித்தல்

## திருமதி யோய்ரட்ணம் ஞானப்பிரகாசம் (பேபி அக்கா)

திருமதி யோய்ரட்ணம் - ஞானப்பிரகாசம் 5.5 92இல் இறைவனடி சேர்ந்தார். இவர் திரு ▽.C. ஞானப்பிரகாசத்தின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும், ஞா. தேவதாஸ் (கனடா), ஞா. ஞானதாஸ் (சுவிற்சலாந்து), ஞா. குணதாஸ் (இளைப்பாறிய யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்), ஞா. ஜெயதாஸ் (கனடா), திருமதி ஜெயதேவி நாகராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும், கிறிசாந்தி அற்புதமலர், புலோனா ஞானதாஸ், செல்வராணி குணதாஸ், ஆசா ஜெயதாஸ் திரு. வே நாகராஜா அவர்களின் அன்பு மாமியும், யோகா செவ்வந்தி, மேனகா, லக்ஸ்மன் யோகா, ஜெகா, தேவானந், சுகந்தி, உஷாதேவகுமாரி ஆசா தேவானந்தி, மோசே ஜொசயா, எஸ்தர் தமயந்தி, சொலமன், கரோலின், சியாமா, நேரு, றடிங்கா, ஆகியோரது பேர்த்தியுமாவார். இன்று(6.5.92)புதன்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில் இல. 30,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்கு என துண்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவனும், பிள்ளைகளும்

(2542)